# முதலாம் தவணைப் பரீட்சை - 2017

## சைவநெறி

178

| சுட்டெண் :.............................. | தரம் : 07 | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

(1) இறைவன் உள்ளத்தின் உள்ளேயும் உள்ளத்தைக் கடந்தும் இருப்பவர் என்பதால் அவருக்கு வழங்கப்படும் பெயர்
1. பதி 2. ஆண்டவன் 3. கடவுள் 4. ஈசன்

(2) பாடசாலையில் கொண்டாடப்படும் சமயவிழா
1. பரிசுத்தினம் 2. நவராத்திரி 3. தமிழ்த்தினம் 4. ஆசிரியர் தினம்

(3) பின்வருவனவற்றுள் பஞ்சமாபாதங்களில் ஒன்று
1. வாய்மை 2. பொய்மை 3. கொல்லாமை 4. கள்ளாமை

(4) பாடசாலை ஒழுக்க விதிகளுள் மிகமுக்கியமானது
1. நேரம் தவறாமை
2. தினமும் பாடசாலை வருதல்
3. காலைப் பிரார்த்தனையில் பங்கு பற்றுதல்
4. பாடசாலை ஊழியர்களுக்கு மதிப்பளித்தல்

(5) வீடுகட்டும்போது அத்திவாரத்தினுள் இடம்பெறுவது
1. குங்குலியம் 2. தண்டக்குளிமண் 3. இருவாட்டிமண் 4. கோயில் மண்

(6) சிவபெருமானின் திருமணத்தால் விசேடம் பெற்ற நாள்
1. தைப்பூசம் 2. ஆனி உத்தரம் 3. மகாமகம் 4. மங்களவாரநாற்

(7) சிறுபறவைக்காக தன் உடலையே ஈர்ந்த பெருமைக்குரியவர்
1. மணிச்சோழன் 2. தசரதச்சக்கரவர்த்தி 3. சிபிச்சக்கரவர்த்தி 4. அசோகமன்னன்

(8) சுக்கிரவார விரதத்திற்குரிய கடவுள்
1. அம்பிகை, முருகன் 2. சூரியன், சந்திரன்
3. சிவபெருமான், முருகன் 4. இலக்குமி, சரஸ்வதி

(9) "வரையெழு மகளோர் பாகமாய்ப் புனைந்து" இதில் வரைகெழு மகள் எனப்படுபவர்
1. வள்ளி 2. தெய்வயானை 3. துர்க்கை 4. உமையம்மை

(10) இறைவனுக்கு தூபம் இடும்பணி செய்தவர்
1. கண்ணப்பநாயனார் 2. மங்கையர்க்கரசியார்
3. குங்கிலியக்கலயர் 4. திருக்குறிப்புத் தொண்டர்

(11) முருகப்பெருமான் உதித்த தினமாகக் கருதப்படுவது
1. ஆடிப்பூரம் 2. வைகாசி விசாகம் 3. மாசிமகம் 4. ஆவணிச் சதுர்த்தி

(12) கிரிசாம்பாளின் கதை உணர்த்தும் விழுமியப் பண்பு
1. பிறர்நலம் பேணல் 2. பொறுமை 3. பெரியோரை மதித்தல் 4. சகோதரத்துவம்

(13) ஆசிரியர் வகுப்பறைக்கு வரும்போது மாணவர்கள்
1. அமைதியாக இருக்க வேண்டும்
2. படித்துக் கொண்டு இருக்க வேண்டும்
3. எழுந்து வணக்கம் கூற வேண்டும்
4. தத்தமது ஆசனத்தில் அமர்ந்திருக்க வேண்டும்

(14) சாமகானத்தால் இறைவனை மயக்கியவர்
1. இராவணன் 2. நாரதர் 3. கண்ணன் 4. பாணர்

(15) தேவவிசேடமும் பிதிர்விசேடமும் கொண்ட மாதம்
1. தை 2. ஆடி 3. புரட்டாதி 4. சித்திரை



kalvi.lk

(16)உத்தராயண புண்ணியகாலத்தில் கொண்டாடப்படும் பண்டிகை

1. தைப்பொங்கல்
2. ஆடிப்பிறப்பு
3. தீபாவளி
4. வருடப்பிறப்பு

(17)தாயின் வடிவம் தாங்கி தன் பக்தருக்கு அருளிய இறைவன்

1. திருச்சிராப்பள்ளி இறைவன்
2. திருக்கடவூர் இறைவன்
3. திருவாரூர் இறைவன்
4. திருத்தோணிபுர இறைவன்

(18)வீட்டை நிர்மாணிப்பதில் பெரும் பங்கு வகிப்பவர்

1. கொத்தனார் 2. கருமான் 3. கொல்லர் 4. சிற்பி

(19)மனிதவாழ்வை வளம்படுத்துவதற்கு வேண்டிய நற்பண்புகளுள் ஒன்று

1. அநீதி 2. அகங்காரம் 3. நேர்மை 4. இன்னாச்சொல்

(20)மாத விரதம்

1. ஆனி உத்தரம்
2. கேதாரகௌரி விரதம்
3. வரலட்சுமி விரதம்
4. விநாயகர் சஷ்டி விரதம்

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

(1) பின்வரும் பாடல்களுள் இரண்டினை எழுதி பாடியவர் பெயரையும் தருக.

I. "நிரை கழலரவம்......"

II. "விருதுகுன்றமா......"

III. "மாதர் பிறைக்கண்ணி......"

IV. "நங்கடம்பனை......"

(9+1 x 2 = 20 புள்ளிகள்)

(2)

I. வாழ்வியல் நற்பண்புகள் நான்கு தருக.

II. மனுநீதிகண்ட சோழனின் கதை உமக்கு எதனை உணர்த்துகின்றது?

III. பஞ்சமாபாதங்கள் எவை?

(4+3+3=10 புள்ளிகள்)

(3)

I. மெய்யடியார்களின் வரலாற்றைக் கூறும் நூல் எது?

II. கலயர் என்பவருக்கு குங்கிலியக்கலயர் எனப் பெயர் வரக்காரணம் யாது?

III. குங்கிலியக் கலயரின் குடும்பம் வறுமையால் வாடியதன் காரணம் யாது?

IV. குங்கிலியக்கலய நாயனாரின் கதை மூலம் நீங்கள் கற்றுக் கொண்ட படிப்பினை யாது?

(2+2+3+3=10 புள்ளிகள்)

(4)

I. புதுமனைப்புகுதலின் மறுபெயர்கள் 2 தருக.

II. புதுமனைப் புகுதலின் போது வீட்டினுள்ளே கொண்டு செல்லும் பொருட்கள் ஆறு தருக.

III. புதுமனைபுகுதலில் அத்திவாரம் இடுவதற்கு பயன்படுத்தும் பொருட்கள் எவை?

IV. புதுமனை புகுவிழா சடங்குமுறை செய்வதால் ஏற்படும் நன்மைகள் இரண்டு தருக.

(5) பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.

| விரதம் | வழிபாடும் கடவுள் | விரதபலன் |
|---|---|---|
| விநாயகர் சதுர்த்தி | விநாயகர் | |
| திருக்கார்த்திகை | | |
| வரலட்சுமி | | |
| ஆடிப்பூரம் | | |

(10 புள்ளிகள்)

(6) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

I. பஞ்சமாக பாதகங்கள்

II. விரதங்கள்

III. புதுமனை புகுவிழா

IV. ஆலயவழிபாடு

(10 புள்ளிகள்)



kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page